# திருகோணமலை நகர சபை

## திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிப்பு

மிளாய்வாண்டினதும் 2009 ஆம் ஆண்டினதும் நிதிக் கூற்றுக்கள் 2011 யூன் 30 வரை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.2 கொடுக்கல் வாங்கல்கள், செயற்பாடுகள் மற்றும் செயலாற்றல் மீதான கருத்துரைகள்

### 1.2.1 வங்கிக் கணக்கிணக்கங்கள்

நிதிப்பிரமாணம் 395 இன்படி ஆறு மாத காலத்திற்கு மேலாக மாற்றப்படாத ரூபா 117,986 பெறுமதியான 31 காசோலைகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேலாக செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 5,294,558 ஆகும்.

### 1.2.3 கணக்கய்விற்கான சான்றுகளின்மை

#### பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2010 யூன் 30 ஆந் திகதி வரையில் ரூபா 77,106,218 பெறுமதியான 60 கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.2.4 இணங்காமைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) நகர சபைக் கட்டளைச் சட்டம் இல. 158(3) | நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 158 இன் (3) ஆம் பிரிவின் பிரகாரம் சகல பெறுவனவுகளும் உரிய வங்கிக் கணக்கில் கட்டாயம் வைப்பிலிடப்பட வேண்டும். 2010 மார்ச் 01 தொடக்கம் 2010 மார்ச் 31 வரை பெறப்பட்ட காசுப் பெறுவனவுகள் ரூபா 360,840 ஆனது வங்கியில் வைப்பிலிடப்படாமல் நாளாந்த கொடுப்பனவுகளுக்காக உபயோகிக்கப் பட்டிருந்தது. |
| (ஆ) நகரசபை (நிதி மற்றும் நிருவாகம்) விதிகள் | |
| (i) IV ஆம் அத்தியாயத்தின் 126 ஆம் பிரிவு | மீளாய்வாண்டில் தலைவரினால் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. |
| (ii) IV ஆம் அத்திகயாத்தின் 131 ஆம் பிரிவு | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களில் சகல விபரங்களும் அதாவது கொடுப்பனவுகளின் தன்மை, பாதீட்டு ஏற்பாடு அத்திகதி வரையிலான செலவினம் மற்றும் மீதிகள் என்பன குறிப்பிடப்படாமல் தயாரிக்கப்பட்டிருந்தது. |
| (iii) X ஆம் அத்தியாயத்தின் 227 ஆம் பிரிவு | சபையில் உத்தியோகத்தர்களினால் பெறப்பட்ட லீவு விபரக் கூற்றொன்று ஒவ்வொரு அரையாண்டு முடிவிலும் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் இல. 104 | ரூபா 300,000 பெறுமதியான நட்டங்களையும் இழப்புக்களையும் உரிய தரப்பினரிடமிருந்து |

| | |
|---|---|
| | அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) கொள்வனவு வழிகாட்டிக் கைநூல் 2.14.1 | (i) கேள்வி நடைமுறைகளைப் பின்பற்றாமல் ரூபா 564,500 தொகையான வாகன பழுதுபார்த்தல் செலவினம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| | (ii) கேள்வி நடைமுறைகளைப் பின்பற்றாமல் கைவிரல் அடையாள இயந்திரக் கொள்வனவுக்காக ரூபா 167,272 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 வருமான நிர்வாகம்

### 2.1.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடரபான நிலைமை கீழே தரப்படுகின்றன.

| | | 2010 | | | 2009 | |
|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ள படியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் | மதிப்பிடப் பட்டது | உள்ள படியானது |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | இறைகளும் வரிகளும் | 45,804 | 8,245 | 10,664 | 11,244 | -- |
| (ii) | வாடகைகள் | 18,910 | 2,707 | 51,750 | 10,804 | 6,281 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,547 | 1,296 | 251,420 | 2,970 | 2,718 |
| (iv) | வேறு வருமானங்கள் | 3,634 | 3,173 | 459,927 | -- | -- |

### 2.1.2 நீதிமன்ற தண்டப்பணங்கள்

பல்வேறு கட்டளைகளின் கீழ் திருகோணமலை நீதவான் நீதி மன்றத்தால் 2010 திசெம்பர் 31 வரை சேகரிக்கப்பட்டு மாகாண வருமான ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்த, ரூபா 9,737,109 தொகையான நீதிமன்ற தண்டப்பணங்களை அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்வில்லை.

### 2.1.3 முத்திரைக் கட்டணங்கள்

மீளாய்வாண்டில் பதிவாளர் நாயகத்திடமிருந்து கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் கணிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்க வில்லை.

### 2.1.4 தீர்க்கப்படாதிருந்த உள்ளூராட்சி விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய பங்களிப்பு ரூபா 5,742,483

மீளாய்வாண்டிற்கான விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய பங்களிப்புத் தொகையான ரூபா 5,742,483 ஆனது இவ்வறிக்கைத் திகதி வரையிலும் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.1.5 திர்க்கப்படாத நீர் வழங்கல் கட்டணம் ரூபா 4,388,041

இலங்கை கடற்படையினரால் நீர்வழங்கல் தொடர்பாக ரூபா 4,388,041 தொகையானது சபைக்குச் செலுத்தப்படாதிருந்ததுடன் இப்பொறுப்பானது 1991 ஆம் ஆண்டு தொடக்கம் திரண்டு வந்திருந்தது.

### 2.1.6 நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 193,073

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய நீர்க்கட்டண நிலுவை ரூபா 193,073 ஆகக் காணப்பட்டதுடன் இதனை 1982 இலிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.1.7 நிலுவை விடுதி வாடகை

1997 முதல் 2006 ஆம் ஆண்டு வரையான நிலுவை விடுதி வாடகை ரூபா 254,783 தொகையினை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.1.8 அறவிடப்படாத வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்**

2006 முதல் 2010 ஆம் ஆண்டு வரையான நிலுவை வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணங்களை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.1.9 திருகோணமலை வாடிவீட்டு வாடகை**

நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து 1996 முதல் 2007 வரையான காலப்பகுதியில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வாடகைக்கு விடப்பட்டிருந்த குத்தகை வாடகையான ரூபா 4,565,275 தொகையினை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2 செலவினக் கட்டமைப்பு**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்டவை, உள்ளபடியான செலவினம் மற்றும் முரண்கள் என்பன கீழே தரப்படுகின்றன.

| செலவின விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | முரண் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | முரண் |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| மீண்டெழும் செலவினம் | | | | | | |
| ஆளணி வேதனங்கள் | 72,084 | 73,683 | (1,599) | 71,300 | 68,370 | 2,930 |
| ஏனையவை | 31,436 | 17,499 | 13,937 | 28,826 | 23,835 | 4,991 |
| உப மொத்தம் | 103,520 | 91,182 | 12,338 | 100,126 | 92,205 | 7,921 |
| மூலதனச் செலவினம் | 11,732 | 2,752 | 8,980 | 9,566 | 3,836 | 5,730 |
| முழு மொத்தம் | **115,252** | **93,934** | **21,318** | **109,692** | **96,041** | **13,651** |

**2.3 மேலதிகக் கட்டண அறவீடு**

1987 ஏப்ரல் 16 ஆந் திகதிய நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆவது அத்தியாயம்) கீழ் பிரகாரம் பொறுப்பானவர்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட தண்டப்பண அறவீட்டின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த மிகை விதிப்பின் பெறுமதி ரூபா 4,027,857 ஆகும்.

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### 2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணி

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணியின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவிகளின் வகை | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது | பற்றாக்குறை/ மேலதிகம் |
|---|---|---|---|
| பதவிநிலைத் தரங்கள் | 03 | 01 | 02 |
| இரண்டாம் நிலைத் தரங்கள் | 53 | 39 | 14 |
| ஆரம்ப தரங்கள் | 205 | 171 | 34 |
| ஏனைய (அமைய/ தற்காலிக) | -- | 105 | (105) |
| மொத்தம் | 261 | 316 | (55) |

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 உபயோகமற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய பௌதீகவளங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்டதன் பிரகாரம் உபயோகமற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய பௌதீக வளங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்டுகின்றன.

| சொத்துக்கள் | பெறுமதி | உபயோகமற்ற காலப்பகுதி |
|---|---|---|
| | ரூபா | |
| சந்தைக் கட்டிடம் | 10,000,000 | 19 வருடங்கள் |
| 08 எண்ணிக்கைகளான வாகனங்கள் | 1,600,000 | 02 வருடங்கள் |
| 12 எண்ணிக்கையான பாவிக்கப்படாத இயந்திரங்கள் | 3,096,000 | 02 வருடங்கள் |

### 2.5.2 கிடைக்க வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 1,175,340 ஆகக் காணப்பட்டதுடன் 01 ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருக்கின்ற கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,048,246 ஆகும்.

### 2.5.3 பெறவேண்டிய உத்தியோகத்தர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய உத்தியோகத்தர் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 10,411,257 ஆக இருந்ததுடன் மீதி நிலுவைகள் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.5.4 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

2010 திசெம்பா 31 ஆந் திகதியில் உள்ளவாறு சொத்துப் பதிவேட்டில் காண்பிக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதியான ரூபா 67,379,865 தொகையானது பௌதீகரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.6 வாகனப் பயன்பாடு

### 2.6.1 எரிபொருள் பாவனை

வாகனத்தின் நாளாந்த ஓட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருந்த கிலோமீற்றருக்கும் உள்ளவாறான துாரத்தின் கிலோமீற்றருக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்பட்டன. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| வாகன இல | திகதி | ஓட்ட அட்டவணையின் பிரகாரம் கிலோமீற்றர் | உள்ளவாறான கிலோமீற்றர் | வித்தியாசம் |
|---|---|---|---|---|
| | | கி.மீற்றர் | கி.மீற்றர் | கி.மீற்றர் |
| டபிள்யுபீஜே - 9328 | 21.01.2010 | 70 | 14 | 56 |
| டபிள்யுபீஜே - 5262 | 22.06.2010 | 94 | 84 | 10 |
| டபிள்யுபீஜே - 5262 | 24.06.2010 | 68 | 63 | 05 |

## 2.7 வெளிப்படையான முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கேள்வி நடைமுறைகளின்றியும் இயந்திர பொறியியலாளரின் அறிக்கை பெறப்படாமலும் நகர சபையின் வாகனத் திருத்தற்திற்காக ரூபா 564,500 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கேள்வி நடைமுறைகளைப் பின்பற்றாமல் டயர் கொள்வனவுக்காக ரூபா 561,600 தொகையானது செலுத்தப்பட்டிருந்தது. மேலும் இக் கொள்வனவு விடயங்கள் பொருட்பதிவேட்டுப் புத்தகங்களில் பதியப்பட்டிருக்கவில்லை.

(இ) நானாந்த சேகரிப்புக்களை வைப்பில் இடல்களில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஈ) உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்படாமல் உள்ளூராட்சி வார கொண்டாட்டங்களுக்காக ரூபா 231,482 தொகை செலவிடப்பட்டிருந்தது. மேலும் பீஎல்/7/10/5 ஆம் இலக்க 2010 ஒக்தோபர் 20 ஆந் திகதிய சுற்றுநிருபத்தின் அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படாமையும் அவதானிக்கப்பட்டது.

(உ) கேள்வி நடைமுறைகளைப் பின்பற்றாமல் ரூபா 167,272 தொகையான கைவிரல் அடையாள இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் இவ்வியந்திரம் பொருட் பதிவேட்டுப் புத்தகத்தில் பதியப்படாமை மேலும் அவதானிக்கப்பட்டது.

## 2.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பாதுகாவலர்கள் சபையின் நிரந்தர பதவியணியில் உள்ளீர்க்கப்பட்டிருந்த போதிலும் தனியார் பாதுகாப்பு நிறுவனத்தின் சேவையைப் பெறுவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2,066,643 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 167,272 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட கைவிரல் அடையாள இயந்திரம் சபையினால் பயன்படுத்தப்படுத்தப்பட்டிருக்க வில்லை.

**2.9 உள்ளகக் கணக்காய்வு**

சபையில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) நிலையான சொத்துக்கள் மீதான கட்டுப்பாடு